# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:15 வள்ளுவராண்டு 2030 கார்த்திகை 23 வியாழக்கிழமை (9-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:11


# முல்லைத்தீவு கடலில் நேற்றுக் கடுஞ் சமர்!

## டோறாப்படகு ஒன்று பலத்த சேதம் 4 படையினர், 4 புலிகள் உயிரிழப்பு

திருகோணமலை, டிசெம்பர் 9

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 3-30 மணியளவில் கடற்படையினருக்கும் — கடற்புலிகளுக்கும் இடையே கடுஞ்சமர் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது:

இந்தச் சமரில் கடற்படையினருக்குச் சொந்தமான டோறா ஒன்று பலத்த சேதமடைந்ததுடன் அதில் பயணம் செய்த 4 கடற்படையினர் பலியாகினர். 5 பேர் காயமடைந்தனர். புலிகள் தரப்பிலும் நால்வர் உயிரிழந்தனர்.

விடுதலைப்புலிகளின் படகுகளைக் கண்ட கடற்படையினர் அவற்றின் மீது தாக்குதல் தொடுத்தனர் எனவும் —

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் சிலர் உயிரிழந்தனர் எனவும் —

பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதே வேளை மேற்படி தாக்குதலில் பலத்த சேதமடைந்த டோறா பீரங்கிப் படகு நேற்று மாலை திருகோணமலைத் துறைமுகத்துக்கு இழுத்து வரப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த படையினர் காங்கேசன்துறையில் உள்ள கடற்படை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம் —

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் படகுகள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தினர் எனவும் —

கடற்புலிகள் பதில் தாக்குதல் நடத்தியதில் கடற்படையினர் தரப்பில் 4 பேர் உயிரிழக்க மற்றும் சிலர் காயமடைந்ததாகவும் —

டோறா படகு ஒன்று சேத

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அருட் சகோதரி மீதும் "ராகிங்" கொடூரம்!

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ். பல்கலைக்கழக முதலாம்வருட கிறிஸ்தவ மாணவியான அருட் சகோதரி ஒருவர் நேற்றுப் பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து 'ராகிங்' துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தினால் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ராகிங்' சம்பவத்தின் போது அருட் சகோதரியான மேற்படி மாணவியிடம் மதம் சம்பந்தமான தகாத வார்த்தைகள் பேசப்பட்டதாகவும்—

மற்றொரு மதக் கடவுளின் பெயரைக்குறிப்பிட்டு அவரை வணங்குமாறு பணித்ததாகவும்—தெரிவிக்கப்பட்டது.

இந்த முறைப்பாடு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று துணைவேந்தர் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அக்கரைப்பற்று, திவுலப்பிட்டிய

## ஐ. தே. க. அலுவலகங்கள் நேற்றுத் தாக்கப்பட்டன

திருகோணமலை, டிசெ. 9

அக்கரைப்பற்று, திவுலப்பிட்டிய பகுதிகளில் உள்ள ஐ. தே. கட்சியின் பிராந்திய அலுவலகங்கள் நேற்று அதிகாலை தாக்குதலுக்கு உள்ளாகின.

அக்கரைப்பற்று அலுவலகத்துள் நுழைந்த குழு ஒன்று அங்கிருந்த தளபாடங்களை அடித்து நொருக்கியுள்ளது.

திவுலப்பிட்டிய அலுவலகத்துள் நுழைந்த குழுவினர் அங்கிருந்த வாகனங்களை அடித்து நொருக்கியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்துள்ளனர்.

அக்கரைப்பற்றுப் பொலீஸார் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-7-150]

### மன்னாரில் சம்பவம்:

## இரு குடும்பஸ்தர்களின் சடலங்கள் ஒப்படைப்பு

வவுனியா, டிசெ. 9

மன்னார் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகத் தெரிவித்து படையினரால் நேற்று முன்தினம் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட குடும்பஸ்தர் இருவரின் சடலங்கள் நேற்று அவர்களது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டன.

எல்வின் நேசம் [வயது 52 —பரப்புக்கடந்தான்], சாந்தன் பிரான்சிஸ் [வயது 23— குமானாயன்குளம்] ஆகியோ

10 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் மூவரின் சடலங்களும் ஒப்படைப்பு

வவுனியா, டிசெ. 9

மூன்று தினங்களுக்கு முன் உயிரிழந்ததாகத் தெரிவித்து வன்னிப் படையினரால் கடற்படையினர் மூவரின் சடலங்கள் நேற்றுக் காலை வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

மிகவும் அழுகிய நிலையில் துர்நாற்றம் வீசிக் காணப்பட்ட மேற்படி சடலங்களில் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைகளை அடுத்து நேற்று மாலை இந்தச் சடலங்கள் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (உ-7-164)

## கடற்படைப் படகு மீது மட்டக்களப்பிலும் தாக்கு!

### இருசிப்பாய்கள் உயிரிழப்பு

மட்டக்களப்பு, டிசெ. 9

மட்டக்களப்பு மாவட்டக் கரையோரப் பகுதியில் ரோந்து சென்ற கடற்படையினரின் படகு ஒன்றின் மீது நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது

இந்தத் தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர் என்றும் —

ஒரு சிப்பாய் படுகாயமடைந்தார் என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது (உ-6)

## கல்முனை நகரில் குண்டு வெடிப்பு! 4 படையினர் உட்பட 18 பேர் காயம்!!

அம்பாறை, டிசெ. 9

கல்முனை பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் 12-15 மணியளவில் மோட்டார்சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்டதாகக் கருதப்படும் குண்டு ஒன்று வெடித்ததில் நான்கு விசேட அதிரடிப்படையினர் உட்பட 18 பேர் காயமடைந்தனர்:

பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள ஹோட்டல் ஒன்றின் அருகிலேயே அந்த மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்தது.

அருகே நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் இரண்டு சைக்கிள்களும் கூட இக்குண்டு வெடிப்பால் முற்றாக எரிந்து நாசமாகின.

அப்பகுதியில் இருந்த பழக் கடை ஒன்று தீப்பிடித்து எரிந்ததுடன் 7 கடைகள் சேதம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### இரண்டாம் கட்ட

## இடர்காலக் கொடுப்பனவுகள் போக்குவரத்து ஊழியருக்கு!

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் 1998 ஆம் ஆண்டுக்குரிய இரண்டாம் கட்ட இடர்காலக்கொடுப்பனவுகள் இன்று வழங்கப்பட உள்ளதாகச் பொது முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்தக் கொடுப்பனவுகளுக்கான 19 லட்சம் ரூபா நிதி வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நீண்ட காலமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தமக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென்று போராட்டம் நடத்தி வந்தனர். இதனை அடுத்து 1998 ஆம் ஆண்டில் இருந்து அவர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்க போக்குவரத்துத் துறை அமைச்சர் இணக்கம் தெரிவித்திருந்தார்.

இதற்கமைய முதலாம் கட்டக் கொடுப்பனவு கடந்த ஒக்ரோபர் மாதம் வழங்கப்பட்டது. அதன் இரண்டாவது கட்டக் கொடுப்பனவு தற்போது வழங்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## சிவில் நிர்வாகக் கடமைகளை படை அதிகாரிகளிடம் வழங்குவதா?

### தமிழ்க் கட்சிகள் சீற்றம்

கொழும்பு, டிசெ. 9

வடக்கு—கிழக்குமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இடம் பெயர்ந்தோருக்கான சிவில் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளுவதற்கென ஐந்து படை அதிகாரிகளை இணைப்பதிகாரிகளாக ஜனாதிபதி நியமித்திருப்பதற்கு தமிழ் அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன:

அரசாங்க அதிபர்கள், மேலதிக அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் என பல சிவில் அதிகாரிகள் ஏற்கனவே இந்த மாவட்டங்களில் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் படை அதிகாரிகளை அங்கு மேலதிக சிவில் அதிகாரிகளாக நியமித்துள்ளது பல சந்தேகங்களுக்கு வழிவகுத்துள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்தச் செயல் வடக்கு — கிழக்கு மாகாணத்தைத் தொடர்ந்து யுத்த பூமியாக நிலை நிறுத்தும் செயல் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும்போது செய்யப்பட்டுள்ள இந்த நியமனங்கள் அந்த மாகாணத்தில் அரசாங்கம் தேர்தல் மோசடிகளில் ஈடுபட வழி வகுக்கும் என்று ஐ. தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க கூறினார்.

இது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர்.சம்

[10 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

போட்டோஸ்ரற் மிசின் விற்பனைக்குண்டு

புதிய Sharp 1118 ரக போட்டோஸ்ரற் மிசின், பக்ஸ் மிசின், ரோனர், ஸ்ரப்லேசர், கோழிகளுக்கு சொண்டு வெட்டும் மிசின் ஆகியன விற்பனைக்கு உண்டு.

EDNA Distributors
558, Hospital Road, Jaffna.
[71646]

# கிராம சேவையாளர்களுக்கு தேர்தல் குறித்து அறிவுறுத்து

வலி மேற்கு, டிசெ. 9

வாக்களிப்பு நிலையங்களில் பெண் வாக்காளர்களைப் பரிசோதனை செய்வதற்காக ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் மறைவிடம் ஒன்றை அமைக்குமாறு பொலீஸ் அதிகாரி கிராம உத்தியோகத்தர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய 29 வாக்களிப்பு நிலையங்களின் பொறுப்பாளர்களாகிய கிராம உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை காலை கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகியபிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பு, மின்சாரம், தண்ணீர்வசதி, இடவசதி போன்ற பல தரப்பட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் பாதை தொடர்பாகவும் பொலீஸ் பொறுப்பதிகாரிகிராமசேவையாளர்களிடமிருந்து கேட்டறிந்து கொண்டார்.

[இ-175]

# மரண அறிவித்தல்கள்

## எம். செபஸ்தியாம்பிள்ளை (பூபாலசிங்கம்)

(உரிமையாளர், 'Happy Enterprises'')

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சொந்த இடமாகவும் தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட எம். செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் 06-12-99 இல் கொழும்பில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசேஸ் மரியம்மா தம்பதியினரின் அன்பு மகனும், அமராவதியின் அருமைக் கணவரும், சுரேஸ்குமார் (கனடா), சாந்தினி (அமெரிக்கா), றொமேஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கண்மணி, காலஞ்சென்ற அழகரட்ணம், மனோன்மணி, குமார் அன்ரனிப்பிள்ளை (லண்டன்), அருள்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (9-12-99) காலை 10.00 மணிக்கு கல்கிசையில் நடைபெறும் இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் நாளை (10-12-99) காலை 6.30 (புதிய நேரம்) மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
அருட் சகோ. எஸ் ஏ. றொஷான்
(மருமகன்)
''செல்வம்ஸ்''
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

26 School Avenue,
Station Road,
Dehiwela
T P. 01-714308
[71630]

## திருமதி விருத்தாம்பாள் முத்துலிங்கம்

(தங்கச்சியம்மா)

பருத்தித்துறை பூதராயர் கோயில் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி விருத்தாம்பாள் முத்துலிங்கம் 07-12-99 இல் சிவபதமடைந்து விட்டார்.

இவர் முத்துலிங்கம் (ஓய்வுபெற்ற பருத்தித்துறை நகரசபை மின் இணைப்பாளர்) அவர்களின் அன்பு மனைவியும், மு. ஏரம்பமூர்த்தி (ஓய்வு பெற்ற தெஹிவளை தபாலக தபாலதிபர்), திருமதி ஆ. ஜெயராணி, மு. சிவராஜா (நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை), திருமதி ந. விஜயராணி (லண்டன்), திருமதி ச. ஜீவராணி, திருமதி இ. இராசநாயகி, மு. இரகுநாதன் (சுரன் சுவையக உரிமையாளர்), மு. இரங்கநாதன் ஆகியோரது அன்புத் தாயாரும், இ. ஆதிமூலம், வி. நவரட்ணராஜா (லண்டன்), கா. சக்திவேல் (பொறியியலாளர், ரெலிகொம், நுகேகொட), பொ. இரஞ்சனதேவர் (ஆய்வு கூட உதவியாளர் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), திருமதி ஏ. ஸ்ரீபதமவேணி, திருமதி சி. இரத்தினராணி, திருமதி இ. நாகேஸ்வரி, திருமதி இ. மாலினிதேவி ஆகியோரின் மாமியாருமாவார்.

இவரது பூதவுடல் 07-12-1999 செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணியளவில் பருத்தித்துறை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. முத்துலிங்கம்
(கணவர்)

பூதராயர் கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.
[71643]

## யோசப் யோன்ஸ்வரன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோ. யோன்ஸ்ரன் 08-12-99 அன்று பிரான்சில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற யோசப், திருமதி மாகிறட் யோசப் ஆகியோரின் மகனும், திரு. திருமதி நீக்கிலாஸ் (கரவெட்டி) ஆகியோரின் மருமகனும், நீற்றாவின் அன்புக்கணவரும், ஜெசிக்காவின் அன்புத் தந்தையும், சேவியர் (சங்கானை அரசினர் வைத்தியசாலை), தேவராஜா (A D E ஆங்கிலம் தென்மராட்சி), ஐறின் வின்சன் (மா. பி. ப. சுகாதார சேவை யாழ்), மைக்கல் (ஸ்ரான்லிக் கல்லூரி, பௌலின் தோமஸ் (புனித பத்திரிசியார் கல்லூரி), ரதி - இருதயராஜா (வினான்) வோல்ட்டன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயராணி, காமலா, வின்சன், ஞானகௌரி தோமஸ், இருதயராஜா ஆகியோரின் மைத்துனரும் லியோனி, டசில், பஸ்ரி, பேட்டி, பிறயன், கிறிஸ்பி, றொபேட்டா, செல்வினி ஆகியோரின் சித்தப்பாவும் றோசான், தர்சன், டிவானி ஆகியோரின் மாமரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
J.J. மைக்கல்

131, மவுண்கார்மல்வீதி,
யாழ்ப்பாணம்.
(71639)

றீகல்
திரை அரங்கு
(ஸ்ரான்லி வீதி)
றீகல் டாக்கீஸ்
(ஈச்சமோட்டை)
பிரபுதேவா, ரம்பா
நடித்த
ஷண்ணின்
'நீ எனக்கு
உயிரம்மா'
10 30, 2 30, 6 30
நேரடி CD யில்
(7 658)

லிபேட்டி அச்சுவேலி
ஐஸ்வர்யாராய் - ஜனனி
நடித்த
தாஜ்மகால்
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 11 30 2 30
T.P.No 070-212223
070-212678
(71461)

ஸ்ரீசெல்வா திரை
யாழ்ப்பாணம்.
தினசரி:- 10-30, 2-30
(பழைய நேரம்)
பிரபுதேவா - ரம்பா
பிரகாஷ்ராஜ் நடித்த
நீ எனக்கு
உயிரம்மா
(புதிய வெளியீடு)
(71649)

நாகஸ்லஸ்
சுன்னாகம்
ரஜனி, ரோஜா
நடித்த
உழைப்பாளி
காட்சிகள்:
11-00, 2-30
(புதிய நேரம்)
(71609)

ராஜா
யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
சரத்குமார், சுகன்யா
மற்றும் பலர் நடித்த
மகாபிரபு
10-30, 2-30
நாளை முதல்
காதலுக்கு மரியாதை
(சி/10117)

# சுகாதாரத் திணைக்கள அறிவித்தல்

பெருந்தொகையான — திகதி காலாவதியான — செரிஷ் Cherish Brand பிஸ்கட் யாழ் குடாநாட்டிற்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடு கிடைத்துள்ளது. காலாவதியான பிஸ்கட் வகைகளை விற்பனை செய்வது 1980 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் பிரகாரம் குற்றமாகும். எனவே காலாவதியான பிஸ்கட் வகைகளை எக்காரணம் கொண்டும் அத் திகதிக்குப்பின் விற்பனை செய்யவேண்டாம் என வர்த்தகர்களையும் அவற்றை வாங்கிப் பாவிக்கவேண்டாம் என பொதுமக்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

வைத்திய கலாநிதி க. தா. சிவபாதம்,
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(சி/10151)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இளையையா

பங்கிலிட்டி, குப்பிளான் தெற்கைச் சேர்ந்த கந்தையா இளையையா நேற்று 08-12-99 (புதன்) பிற்பகல் 3.00 மணியளவில் இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் செல்லம்மா (மணி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சரவணமுத்து, சுந்தரம்பிள்ளை மற்றும் விசுவலிங்கம் (சுவிஸ்), அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் கெங்காதரன் (இத்தாலி), பூங்கோதை (கனடா), சுகுணகுமாரி (ஜேர்மன்), முரளிதரன் (சுவிஸ்), வனஜா (சுவிஸ்) ஆகியோரின் தந்தையாரும் இராஜகுமார் (இத்தாலி), நித்தியானந்தன் (லண்டன்), சூரியகுமார் (ஜேர்மன்), வனிதா (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் சயித்தா, சற்சேஸ், சபீசா, கௌதமன், மிதுரகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-12-99) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணியளவில் குப்பிளான் காடாகடம்பை மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்லம்மா (மணி)
(மனைவி)

குப்பிளான்,
ஏழாலை.
(71655)

## வடிவேலு கந்தசாமி

(உரிமையாளர், பரமேஸ்வரி ஸ்ரோர்ஸ், களுவாஞ்சிக்குடி)

துன்னாலை அல்லையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட வடிவேலு கந்தசாமி அவர்கள் 8-12-99 புதனன்று சிவபதமெய்தினார்.

அன்னார் பரமேஸ்வரியின் கணவரும், நித்தியானந்தன், நிர்மலாதேவி, நிமாலினி (லண்டன்), நிவேதினி (லண்டன்), சிவானந்தன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும் க. கருணாநிதி (இலங்கை வங்கி நெல்லியடி), பா. பாலகுமார் (லண்டன்), இரத்தினரஞ்சினி, வானதி (லண்டன்), ஆகியோரின் மாமனாரும் வ. சந்திரசேகரம் (உரிமையாளர் கௌரி ரேடேஸ், கொழும்பு), வ. குலசேகரம் (கௌரி ரேடேஸ், கொழும்பு), திருமதி வா. இராசேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் மு. வாசரத்தினம் (ஷோனா கொமினிகேசன் மட்டக்களப்பு) அவர்களின் மைத்துனரும் கவிதா, கனேந்திரா, வித்தியா, ரதீஸ், ரமேஷ், நிரோஷா, நிரோசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரிகைள் இன்று (9-12-99) களுவாஞ்சிக்குடியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கருணாநிதி
(மருமகன்)

''நிர்மலா நிலையம்''
அல்லையம்பதி
துன்னாலை, கரவெட்டி,
(71648)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளை தாக்கும் ஏவுகணை சீனாவிடம்!

பீஜிங், டிசெ. 9

அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளின் தலைநகர்களை தாக்கும் திறன் கொண்ட நீண்ட தூர ஏவுகணைகளை சீனா தயாரித்துள்ளது.

கடலில் இருந்து தரைக்குப் பாயக்கூடியதும் கண்டம் விட்டுக் கண்டம் பாயக் கூடியதுமான இந்த ஏவுகணைகள் நீர் மூழ்கிக் கப்பலில் பொருத்தப்பட்டு ஏவக் கூடிய வலுக் கொண்டவை.

இவை ஒன்பதாயிரம்கிலோ மீற்றர் தூரத்துக்குச் சென்று தாக்கும் திறன் கொண்டவை என்று — சீன விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

சோவியத் தயாரிப்பான என்ஜின்களின் உதவியுடன் இந்த ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டன என்றும்—

தற்போதுள்ளசூழ்நிலையில் இந்த ஏவுகணையின் தேவை கருதி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும்—சீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

[இ-க-3]

# அமெரிக்காவுக்கு எதிராக கியூபாவில் ஆர்ப்பாட்டம்

அங்கோலா, டிசெ. 9

கியூபாவில் அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள கடலில் அமெரிக்க மீனவர்கள் கியூபாவைச் சேர்ந்த 5 வயதுச் சிறுவன் ஒருவனை காப்பாற்றியதாகவும் —

அந்தச் சிறுவனை கியூபாவில் உள்ள அவனது தந்தையிடம் ஒப்படைக்குமாறு கியூபா கோரியிருந்ததாகவும் —

அந்தக் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்து விட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து கியூபாவில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதாகவும் —

இதனால் நகர் ஸ்தம்பித்துப் போயுள்ளது என்றும்— பி.பி.ஸி. தெரிவித்தது.

# ரஷ்யாவுக்கான நிதி உதவிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

## சர்வதேச நாணய நிதியம் நடவடிக்கை

லண்டன், டிசெ. 9

செச்சினியத் தலைநகர் குறோஸ்னியில் இருந்து பொதுமக்களை வெளியேற வேண்டும் என்று ரஷ்யா விடுத்துள்ள அறிவிப்பைக் கண்டித்துள்ள சர்வதேச நாணய நிதியம் அந்த நாட்டுக்கான நிதி உதவியை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக நேற்று அறிவித்தது-

குறோஸ்னியில் உள்ள பொதுமக்கள் எதிர்வரும் சனிக்கிழமைக்குள் வெளியேற வேண்டும் என்றும் —

அவ்வாறு வெளியேறாவிட்டால் தாக்குதலுக்குள் சிக்க வேண்டி நேரிடும் என் என்றும் — ரஷ்யப் படைகள் அறிவித்துள்ளன.

இந்த அறிவிப்பை கடுமையாகக் கண்டித்துள்ள சர்வதேச நாணய நிதியம் ரஷ்யாவுக்கு வழங்கவிருந்த 640 கோடி டொலர் உதவியை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த முடிவு ரஷ்யாவின் பொருளாதார நிலையை பெரிதும் பாதிக்கும் என்று பி.பி.ஸி கருத்து வெளியிட்டது.

ஆனால் இந்த நிதி உதவி நிறுத்தமோ, சர்வதேச அழுத்தங்களோ தன்னைப் பாதிக்கப் போவதில்லை என்றும் திட்டமிட்டபடி தனது நடவடிக்கைகள் இடம் பெறும் என்றும் ரஷ்யா கூறியுள்ளது.

(இ-க-3)

## புதிய முறையில் பிறந்த நாள் கொண்டாட்டம்

கோலாலம்பூர், டிசெ' 9

சிங்கப்பூரில் வசிக்கும் கோடீஸ்வரர் ஒருவர் தனது 91 ஆவது பிறந்தினத்தை புதிய முறையில் கொண்டாடியுள்ளார்.

அந்த நாட்டில் உள்ள 90 வயதுக்கு மேற்பட்ட தமது சக வயதுக்காரர்களைக் கௌரவிக்கும் வகையில் ஒவ்வொருவருக்கும் தலா 600 அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாக வழங்கினார் அந்தக் கோடீஸ்வரர்.

அந்தநாட்டில் ஆயிரத்து 200 பேர் 90 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# குறோஸ்னி மக்களைப் பாதுகாக்க உலக நாடுகள் உதவ வேண்டும்

## அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் கோரிக்கை

நியூயோர்க், டிசெ. 9

'தாக்குதல்கள்எப்போதும் நடை பெறலாம் என்ற அச்ச நிலையில் வெளித்தொடர்புகள் எதுவும் இன்றி உள்ள குறோஸ்னி பொதுமக்களைக் காப்பாற்றஉதவ வேண்டும்'

மேற்கண்டவாறு சர்வதேச நாடுகளிடம் அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் கோரியுள்ளது.

குறோஸ்னியில் தங்கியுள்ள மக்களை வெளியேறுமாறு ரஷ்யப் படைகள் அறிவித்துள்ளதை அடுத்தே இந்த அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அமைப்பின் பேச்சாளர் ஒருவர் பி. பி ஸிக்குத் தகவல் வெளியிடுகையில்,

குறோஸ்னியில் உள்ள மக்கள் மின்சாரவசதி உட்பட அடிப்படை வசதிகள் இன்றிக் கஷ்டப்படுவதாகத் தகவல்கள் கூறுகின்றன. அவர்களின் நிலை குறித்து அறிய முடியாமல் உள்ளது வெளித் தொடர்புகள் அற்ற நிலையில் உள்ள அவர்களுக்கு உடன் உதவி தேவையாக உள்ளது.

அத்துடன் ரஷ்யப் படைகள் நடத்தும் தாக்குதல்களில் அவர்கள் சிக்கக்கூடிய அபாயநிலையும் உள்ளது. எனவே உலக நாடுகள் அந்த மக்களைக் காப்பாற்ற உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்—என்றார்.

குறோஸ்னியில் 15 ஆயிரம் பொதுமக்களே உள்ளதாகக் கூறப்பட்டபோதும்—

சுமார் 50 ஆயிரம் பேர் தங்கியுள்ளதாகத் தகவல்கள் கூறுவதாக பி. பி ஸி தெரிவித்தது.

[இ-க-3]

# பாரிய விளைவு ஏற்படும் என கிளின்ரன் கடும் எச்சரிக்கை

மொஸ்கோ, டிசெ 9

''செச்சினியத் தலைநகர் குறோஸ்னியில் உள்ள பொது மக்களை நகரை விட்டு வெளியேறுமாறு ரஷ்யா விடுத்துள்ள உத்தரவை வாபஸ் பெறவேண்டும். இல்லையேல் ரஷ்யா பாரிய விளைவைக் கொடுக்க நேரிடும்' என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் ரஷ்யாவை எச்சரித்துள்ளார்.

ரஷ்யாவின் அறிவிப்பைக் கடுமையாகக் கண்டித்துள்ள பில் கிளின்ரன் தெரிவித்துள்ளதாவது—

''பயங்கரவாதிகளுடன் ரஷ்யப்படைகள் சண்டை பிடிக்கட்டும். அதற்கு நாம் எதிர் அல்ல; ஆனால் பொது மக்களைப் பணயம் வைப்பதை அனுமதிக்க முடியாது. ரஷ்யப்படைகள் விதித்துள்ள காலக்கெடுவுக்குள் ஏதாவது நடந்தால் பாரிய விளைவை ரஷ்யா கொடுக்கவேண்டி நேரிடும்.

குறோஸ்னி நகரில் சிக்கியுள்ள நோயாளர்கள், வயோதிபர்கள், குழந்தைகள் உடனடியாக வெளியேறமுடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

இப்படி கிளின்ரன் கூறினார்.

அமெரிக்காவைத் தொடர்ந்து ஐரோப்பிய சமூக நாடுகளும் ரஷ்யாவின் செய்லை வன்மையாகக் கண்டித்துள்ளன. (இ-க-3)

## உலக அரங்கில்

## யுத்த நிறுத்தம்

கொலம்பியாவின் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை ஒட்டி அரசப்படைகளும், இடதுசாரிப் போராளிகளும் யுத்த நிறுத்தம் மேற்கொள்ள இணங்கியுள்ளனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இந்த யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள அரசு விடுத்த கோரிக்கையை போராளிகள் ஏற்றுள்ளனர் எனத்தெரிவிக்கப் பட்டது

(இ-க-3)

## இராஜினாமா

இஸ்லாமாபாத், டிசெ. 9

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளரினால் உருவாக்கப்பட்ட தேசிய பாதுகாப்புச் சபையில் இருந்து இராஜினாமாச் செய்வதாக பாகிஸ்தானின் [illegible] முன்னாள் [illegible] யாக்கூப் தெரிவித்துள்ளார்.

(க)

# அமெரிக்க விண்கலத்துடனான தொடர்புகள் துண்டிப்பு

## செவ்வாய்க் கிரக ஆராய்ச்சி பாதிப்பு

வாஷிங்ரன், டிசெ 9

அமெரிக்காவினால் கடந்த 11 மாதங்களுக்கு முன்னர் செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பப்பட்ட விண்கலத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்

விண்கலத்துடன் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்த கடந்த ஐந்து தினங்களாக விஞ்ஞானிகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் —

அந்த முயற்சிகளில் பயன் ஏதும் கிடைக்கவில்லை என்றும்— இதனைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவில் கான்பராவில் அமைந்துள்ள பாரிய தொலை நோக்கிகள் . மூலம் இறுதி முயற்சி எடுக்கப்பட்டபோதும் அதுவும் பயன் தரவில்லை என்றும் —விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

பதினாறு கோடி 50 லட்சம் ரூபா செலவில் அனுப்பப்பட்ட இந்த விண்கலம் விபத்தில் சிக்கியிருக்கலாம் என்றும் —

செவ்வாய்க்கிரகத்தில்மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் இதனால் பாதிக்கப்படலாம் என்றும்—விஞ்ஞானிகள் கூறினர்.

[இ-க-3]

# பொதுப் பரீட்சையில் மோசடி; 12 ஆசிரியர்கள் நீக்கம்!

நியூயோர்க், டிசெ 9

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் முதல் தடவையாக பெரும் பரீட்சை மோசடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

பொதுப்பரீட்சையில் மாணவர்களுக்கு கூடுதல் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்ததாக ஆசிரியர்கள் அதிபர்களுக்கு எதிராகக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டதில் இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பாக 50 க்கு மேற்பட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் விசாரிக்கப்பட்டதாகவும் —

விசாரணை முடிவில் 12 ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர் என்றும —

எஞ்சியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் — பொலீஸார தெரிவித்தனர்.

(இ-3)


## அச்சக வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் அச்சகம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமது முழுமையான சுய விவரங்களை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். ''ஒவ் செற்'' அச்சக வேலைகளில் முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவிப் பெயரைக் குறிப்பிடவும்

1. நிர்வாக அலுவலர்
2. அச்சக முகாமையாளர்
3. முகாமி (Foreman)

விளம்பரதாரர்:

விளம்பர இல 981,
மே/பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## Wanted - Secretary

A well established firm is looking for a dynamic and experienced Secretary to the Managing Director in Colombo

If you are above 35 years and have talents and skills, send your curriculum vitae before 15-12-99.

The applicant should be well competent in English and conversant in the other two languages.

Lodging and food will be provided. Salary negotiable.

Advertiser, ADVT - No. 982
C/O UTHAYAN
361, Kasturiar Road,
Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணப்பெண்கள் தேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மணமகன்களுக்கு படித்த மணப்பெண்கள் தேவை. ராசாத்தி அபிராமி திருமண சேவை ஆடியபாதம் சந்தை வீதி, 1ஆம் ஒழுங்கை, கொக்குவில். (71629)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (71616)

## நான்

நான் (ஐப்பசி — மார்கழி) உளவியல் மஞ்சரி வெளிவந்து விட்டது. சகல புத்தகக்கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: நான் ஆசிரியர், வசந்தகம், சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. (71619)

## ENGLISH CLASSES

Improve your skills and knowledge in English. General English G. C. E. ( O/L ) and TOEFL Done. Taught By American Graduate Contact: K Umasuthan, 112, Palaly Road, Near Campus Junction, All translations from Tamil To English, One or Many Pages.

(71582)

## வீடு விற்பனைக்கு

மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் வீடும் [05 அறைகள் Terrazzo தளமிடப்பட்டது]. நீர்த்தாங்கியுடன் கூடியதுமான 16 பரப்புக்காணியும் வீடும் முழுமையாக அல்லது வீடும் 6 பரப்புக்காணி பகுதியாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ஸ்ரீ. கதிர்காமநாதன், ஆங்கில மொழிக் கற்பித்தல் பிரிவு. யாழ். பல்கலைக்கழகம் அல்லது கேணியடி ஒழுங்கை, மீசாலை மேற்கு, மீசாலை. (71378)

## பதவி உயர்வு

அரியாலை, டிசெ.9

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நீண்ட காலமாக பணிபுரியும் ஊழியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

## பாலர் ஆசிரியராக

க. பொ. த. (சா/த) கடைசித் தகைமை
ஆறு மாதத்தில் தபால் வழியில் பயிற்சி
விவரங்களுக்கு:
பாலர் ஆசிரியர் சங்கம்,
கொக்குவில்.
(71106)

## A/L99,2000 DAY CLASS

வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 09-12-99
வியாழன் ந. ப. 12.00 மணி
கணக்கீடு
திரு. பாலா
யாழ். ஆசிரியர் குழு
★ கலைப் பிரிவு ஆரம்பமாகிவிட்டது.

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி.
(71634)

## G.A.Q. [பேராதனை வெளிவாரி]

★ பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குரிய பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ விண்ணப்பப்படிவங்கள் தொடர்பான விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு: S. அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(71631)

## பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்- பளை

# பதவி வெற்றிடம் (தற்காலிகம்)

கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்குத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

1. தொலைபேசி இயக்குனர்.
சம்பளம்:2700 - 60×10 - 70×10 - 4000/-

தகைமைகள்:

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் காரியாலய உதவியாளராக 2 வருடம் சேவையாற்றிய அனுபவம் பெற்றவர்

அல்லது

ஆ) க. பொ. த. (சாதாரண தரம்) சான்றிதழ் கணிதம் / வர்த்தக எண்கணிதம் / எண்கணிதம் / மற்றும் சிங்கள மொழி / தமிழ் மொழி உட்பட 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இ) 18 வயதிற்கும் - 30 வயதிற்கும் உட்பட்டவர்கள் (பெண்கள் விரும்பத்தக்கது).

2. இலிகிதர்:
சம்பளம்: 2650 - 50×10 - 60×10 - 3750/-

தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 13 ஆவது சம்பளத் திட்டத்தில் இலிகிதர் பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் இலிகிதர் பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ) க. பொ. த. (சாதாரண தரம்) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம், சிங்களம் / தமிழ் மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் இலிகிதராகச் சேவையாற்றிய ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

ஈ) வயது 18 - 30 இற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

3. கிளை முகாமையாளர்:
சம்பளம்: 2650 - 50×10 - 60×10 - 3750/-

தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ) க. பொ. த. (சாதாரண தரம்) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம் மற்றும் சிங்களம் / தமிழ் மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களில் சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஈ) வயது 23 - 40 இற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

★ விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் ரூபா 5 செலுத்திப் பெற்றுக் கொள்ளவும்.

★ தகைமைச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

★ விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் "தலைவர், பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம். பளை" என்ற முகவரியிட்டுக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவிக்கான பெயர் குறிப்பிட்டு 20-12-99 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்
பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்,
பளை.
[illegible]

## SPECIAL TALKS BY ENG. Miss VASANTHA NALLATHAMBY

(SPONSERED BY I. E. S L - JAFFNA BRANCH)

An open talk on "SPECIALISED ON BUILDINGS" will be delivered by ENG. Miss VASANTHA NALLATHAMBY (CHARTERED ENGINEER) at Jaffna Campus Library Auditorium on December 10th at 3.30 P. M.

All are cordially invited

SECRETARY
I. E .S. L. (JAFFNA BRANCH)

(71623)

## மங்களகரமான திறப்புவிழா

# கஜானனன்

தொலைத் தொடர்பு சேவை

ஆரம்ப நன்னாள்: பிரமாதி வருடம் கார்த்திகை 23 ஆம் நாள் இன்று (09-12-99) வியாழக்கிழமை காலை 7.48 முதல் 9 18 வரை

உள்நாடு; 070-212746 வெளிநாடு: 0094 70212746

த. தவராசா

பிரதான வீதி, சித்திவிநாயகர் கோவிலடி,
முளாய்.
(71635)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
திரு. க. கிருஷ்ணதாசன்
[தொ. நு. உத்தியோகத்தர்]
அவர்களின் அன்புத் தந்தையார்

### வல்லிபுரம் கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியர் அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

உறுப்பினர்கள்,
செயலாளர், உத்தியோகத்தர்கள்.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.
(71638)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 — 03 — 1979 | 31 — 10 — 1999 |



### அமரர் வடிவேலு லோகநாதன்

(லோகசுன்)
[இளவாலை]

நோக உடல் சுமந்து நொந்து உனைப் பெற்றதினால்
சோக மது தெரியாமல் வாழ்ந்து வந்த வேளையிலே
பாகமதில் உத்தமியை வைத்த பரமனவன் — எம் லோகனையும்
பாகமதில் வைத்திடவோ பறித்து விட்டார் எம்மைவிட்டு

எமது அன்பு மகன் லோகநாதன் இறைபதம் அடைந்த இந்த 41 ஆம் நாளில் அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அத்தோடு நாளை (10—12—99) வெள்ளிக்கிழமை 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அந்தியேட்டிக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து 12.30 மணியளவில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

— குடும்பத்தினர்

கல்லூரி வீதி, இளவாலை.
(71637)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலியில் சிகிச்சை பெறுபவரை ஆஜர்செய்யுமாறு நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ. 9

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ். பலாலி இராணுவ வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகக் கூறப்படும் ஒருவரை எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் எஸ்.ஏ ஈ ஏகநாதன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஸ்ரனிஸ்லஸ் (வயது 33) என்பவரையே ஆஜர் செய்யுமாறு பலாலி இராணுவ வைத்தியசாலை பொறுப்பதிகாரியை நீதிவான் பணித்துள்ளார்.

மேற்படி இளைஞன் சைக்கிள் திருட்டுச் சந்தேகத்தின் பேரில் யாழ். பொலீஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர் என்றும்—

பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும்

அவருக்கான அடுத்த வழக்குத் தவணை நேற்று வழங்கப்பட்டிருந்தது என்றும் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை—

மேற்படி இளைஞன் யாழ். ஆனைப்பந்தி குருநாதசுவாமி கோயில் பகுதியில் கடந்த 24 ஆம் திகதி இனந்தெரியாதோரினால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

பின்னர் அவர் பாதுகாப்புப் படையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது

அங்கு அவரின் உடல்நிலை தேறி வந்த சமயம் கடந்த இரண்டாம் திகதி அவர் பலாலியில் உள்ள இராணுவ ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவரது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

அவரைக் கைது செய்தது குறித்தோ பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சைஅளிப்பது குறித்தோ படையினர் எந்த வித பற்றுச்சீட்டும் தமக்கு வழங்கவில்லை என அவரது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

[இ-9)

## அனுமதி இன்றி சாராயம்

நெல்லியடி டிசெ. 9

அனுமதிப்பத்திரம் இன்றி சைக்கிளில் கொண்டு செல்லப்பட்ட 38 போத்தல் சாராயத்தை பொலீஸ் நிலைய வாயிலில் வைத்து நெல்லியடி பொலீஸார் கைப்பற்றியதுடன், இதனைக் கொண்டு சென்றவரையும் கைது செய்தனர்.

சந்தேக நபர் பருத்தித்துறைமாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் தான் ஒரு தொழிலாளி என்று கூறி அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

அவரது நிலைமையை கவனத்தில் கொண்ட நீதிவான் இ. த. விக்னராஜா, ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்து அப்பணத்தை வதிரி ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமத்தில் செலுத்துமாறு உத்தரவிட்டார். (இ-109)

## சன சமூக நிலையங்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்களும் புதிய ஆண்டுக்கான நிர்வாக சபையைத் தெரிவு செய்து அதன் பட்டியலை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-10)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 9

தென்மராட்சிக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் தரம் 2 இல் அடுத்த ஆண்டு கல்வி கற்பிக்கவிருக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை 10 ஆம் திகதி முதல் ஐந்து தினங்களுக்கு சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இரு தொகுதிகளாக நடைபெறவுள்ள செயலமர்வின் முதலாம் தொகுதி மேற்படி பாடசாலையில் ஆரம்பமாக உள்ளது. இச் செயலமர்வில தரம் 2 இல் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களைப் பங்குபற்றுமாறு தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(இ-7)

# கிளிநொச்சி வாக்குச் சீட்டுகள் திருப்பி அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ். பிரதம தபாலகத்துக்கு வந்து சேர்ந்த வாக்காளர் அட்டைகளில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான 40 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் கொழும்பு தேர்தல் திணைக்களத்துக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டின் ஏனைய தேர்தல் தொகுதிகளுக்கான வாக்காளர் அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் பளைப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு வாக்காளர் அட்டைகளை அனுப்புவதற்கான வசதிகள் எவையும் தற்போது இல்லாத காரணத்தினால் அவை கொழும்புக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் கிளிநொச்சி நிர்வாக மாவட்டமும் யாழ். நிர்வாக மாவட்டமும் அடங்குவது குறிப்பிடத்தக்கது ஐ-9

## இலங்கையில் 16 ஆண்டுகால யுத்தம்:

# சகல தரப்பினரையும் ஆயுதங்களை கைவிடக் கோருகிறார் பாப்பரசர்

இலங்கையில் கடந்த 16 ஆண்டுகளாக யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் தமது ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்று பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் கோரியுள்ளார்.

மடுத்தேவாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காகவும் காயமடைந்தவர்களுக்காகவும் பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் தலைமையில் ரோம் நகரின் சென் பீற்றர்ஸ் தேவாலயத்துக்கு அருகில் உள்ள சதுக்கத்தில் பிரார்த்தனை, வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்விலேயே பாப்பரசர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு நிகழ்த்திய உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானப் பாதையில் செல்வதற்கு அனைவருக்கும் போதிய பலத்தையும் ஆர்வத்தையும் தர நான் இறைவனை வேண்டுகிறேன். ஆயுதங்கள் ஏந்தப்படும் வரை சமாதானம் ஒருபோதும் ஏற்படமாட்டாது.

மடுத்தேவாலயத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காகவும் அங்கு தஞ்சமடைந்துள்ள ஏனைய மக்களுக்காகவும் நாம் அனைவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

உயிரிழந்தவர்களுக்காக இறைஞ்சுவதிலும் காயமடைந்தோருக்கு சிகிச்சை வழங்குவதிலும் இதய சுத்தியுடன் ஈடுபட்ட ஆயர்களுக்கும் மதகுருமாருக்கும் ஆன்மீக ரீதியில் நான் ஆசீர்வாதம் வழங்குகின்றேன்— என்றார்.

இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களும், சுற்றுலாப் பயணிகளும் கலந்து கொண்டனர். [ஐ-6]

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

அச்சுவேலிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை சுற்றாடல் மற்றும் அச்சுவேலி தெற்கு பகுதியில் அதிக எண்ணிக்கையான கட்டாக்காலி நாய்கள் காணப்படுவதாக முறைப்பாடுசெய்யப்படுகின்றது

தோல் நோய்களுக்கு உள்ளான கட்டாக்காலி நாய்கள் நடமாடுவதால் பொதுமக்கள் வீதிகளில்நடமாடுவதற்கு அஞ்சுகின்றனர். (ஐ-11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் **ஆறுமுகம் செல்லையா**
(இளைப்பாறிய கொத்தணி அதிபர்)

மலர்வு 31 – 01 – 1929

உதிர்வு 09 – 11 1999

திதி: 09 – 12 – 1999

அறிவெனும் பண்பில் தோன்றி
ஆண்டவன் பணியைப் போற்றி
இன்புற்று வாழ்ந்து வந்து
ஈழமக்கள் போற்றிட
உயர்ந்து, வாழ்வினை
ஊன்றி அமைத்து,
எமையெல்லாம் வாழவைத்து,
ஏகாந்த நிலையிலே
ஐயம் திரிபுற அமைந்து
ஒன்று பட்ட நிலையில்
ஓடி மறைந்தீர்கள் பப்பா தெய்வமே! பல ஆண்டுகள்
ஔடதமாகச் சென்றாலும் எம்துயர் நீங்காது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி வேண்டிய உதவிகளை யெல்லாம் எமக்களித்து, எமது ஆறாத்துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டோர்களுக்கும், அனுதாபச் செய்திகளை வெளியிட்டோர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் நினைவு மலரை வடிவமைத்து பிரசுரித்த அருண் அச்சகத்தாருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கண்ணீர்ப் பூக்களை அள்ளிவீசும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''நேசவாசம்'',
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(71538)


ஈசன்
கல்வி நிலையம்
கே. கே. எஸ், வீதி,
கோண்டாவில்.

கணக்கீடு
A/L 2001
வங்கிக்கணக்கிணக்கக்கூற்று
சனி, ஞாயிறு 4 30 P M

A/L 2000
பங்குடமை முடிவுக்கணக்கு
சனி, ஞாயிறு 3.00 P.M

திரு. பாலவாசன்
ஆரம்பம்: 11-12-99
(சனி)

★ தனிப்பட்ட அனுமதிகளும் வழங்கப்படும்
(7161?)



இன்று 09-12 99 வியாழன் முதல்

மங்களகரமான ஆரம்பம்

★ உங்கள் உயிரோவியமான நிகழ்வுகளை அதிநவீன தொழில் நுட்ப முறையில் வீடியோப்படம் பிடித்திடவும்—
★ பழைய, புதிய திரைப்படப்பாடல்களை ஓடியோ CD மூலம் பதிவு செய்திடவும்—
★ பழைய, புதிய திரைப்படங்களை வாடகைக்குப் பெற்றிடவும்—

என்றும் நாட வேண்டிய ஒரே இடம்;



அனுரா
வீடியோ விஷன்
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்
(71632)



லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

2000 ஆம் ஆண்டு தை மாதம் ஆரம்பமாக இருக்கும் மருத்துவக் கற்கைநெறிக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்

தகைமை: க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தி வைத்திய பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை.

விண்ணப்ப முடிவு திகதி: 31 – 12 – 99

விண்ணப்பப் படிவங்களையும் விவரங்களையும் நேரிலோ அல்லது தபால் மூலமோ ரூபா 20 செலுத்திப் பெறலாம்.

பதிவாளர்
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(71583)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A GURANTEED PRODUCT

# KOBE
## ANTENNA BOOSTER
## NO:1 SELLER IN SRI LANKA

FROM LANKA NIPPON

AVAILABLE ISLANDWIDE

ASK YOUR NEIGHBOUR FOR 'KOBE' PERFORMANCE

## LANKA NIPPON

18. KEYSER STREET. COLOMBO-11
Tel: 324726. 437735 FAX: 437736

(சி/9860)


## இருவர் காயம்

நெல்லியடி, டிசெ. 9

கடற்கரையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சிறுவன் உட்பட இருவர் ஒரு வகை கடல் ஜந்துவினால் தாக்கப்பட்டு மயக்கமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கற்கோவளம் கடற்கரையில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்தவர்களான நாகரத்தினம் முடியழகன் (வயது 26) தருமகுலசிங்கம் திருவாழ்மாரி பன் (வயது 11) ஆகிய இருவரும் மந்திகை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். [இ-109]


## புத்தாயிரமாம் ஆண்டில்

தரம் - 06 விசேட பிரிவு
[கம்பியூட்டர் தொடர்பான ஆரம்ப அறிவு பயிற்சியுடன் கூடிய வகுப்பு]

விண்ணப்பித்த அனைவரும் தங்கள் பிள்ளைகளுடன் இன்று (வியாழன்) காலை 8.30-க்கு சமுகம் தரவும்.

The Express Institute
IRUPALAI KOPAY

-அதிபர்

(71626)



## தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றிற்கு எழுதுநர் தரத்தில் அனுபவம் வாய்ந்தவர் தேவை.

(வயதெல்லை: 35-50)

தொடர்பு:
விளம்பர இல. 980
மே/பா உதயன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(71621)



## நியூகொம் தொலைபேசி சேவை

லோட்டன் வீதி, மானிப்பாய்.

உள்நாடு — வெளிநாடு தொலைபேசி அழைப்புகளை பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களே!

இன்றே எமது சேவையைப் பயன்படுத்தி புதுவருட பரிசாக புத்தம் புதிய துவிச்சக்கரவண்டி, சுவர்மணிக்கூடு ஆகியவற்றை வென்றெடுங்கள்

அதிர்ஷடம் பார்க்கும் திகதி: 01—01—2000 மாலை 5 மணி

எமது தொலைபேசி இலக்கங்கள்
021 — 2979 070 — 212280

NEW COMM Communication Centre
LAWTON ROAD, MANIPAY.

[71628]


## மின்சாரப் பாவனையாளர்களுக்கான

## அறிவித்தல் - மின்தடை

மின்சார விநியோகம் தடைப்படும் நேரங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் விவரம்:

1. யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகள் நல்லூர்ப்பகுதிகள். — 021 — 2609
2. கொக்குவில், கோண்டாவில் கிழக்கு, திருநெல்வேலி, கல்வியங்காடு, நீர்வேலி, இருபாலை, கோப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதிகள் — 021 — 2498
3. சுன்னாகம், மல்லாகம், உரும்பிராய், அச்சுவேலி, ஆவரங்கால், கோண்டாவில் மேற்கு, தாவடி, சுதுமலை, மானிப்பாய், சங்குவேலி, உடுவில், கந்தரோடைப் பகுதிகள். — 021 — 3001
4. வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சுழிபுரம், சங்கானை, சண்டிலிப்பாய், அராலி, பண்ணாகம் பகுதிகள். — 070 — 212565
5. வடமராட்சிப் பகுதி — கரவெட்டி 3257
6. தென்மராட்சிப் பகுதி — சாவகச்சேரி 2256

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேசம்.

இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
1999—12—06.

தொலைபேசி இல. 021 — 3002 (சி/10136)

## திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 23 ஆம் நாள் (09 - 12 - 99) வியாழக்கிழமை காலை 11-00 — 12 - 34 மணிவரை வரும் கும்பலக்கின சுபமுகூர்த்த வேளையில்

### MANO STUDIO
### மனோ ஸ்ரூடியோ

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்களும் சமுகந்தந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் இனிய நல்வரவை நாடும்
திரு. க. மனோகரன்
(மனோ)

புதிய இல. 211, நாவலர் வீதி,
(பிறவுண சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்.

(71615)

## நல்லூர் பிரதேச சபை - திருநெல்வேலி
## மீன் கேள்வி அறிவித்தல் - 2000

கேள்விப்பத்திர விநியோகம்:— 13 - 12 - 99 நண்பகல் 12.00 மணி வரை.

கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும் :— 14 - 12 - 99 நண்பகல் 12.00 மணி வரை

கேள்வி திறக்கும் திகதியும் நேரமும் :— 14 - 12 - 99 பிற்பகல் 3.00 மணி.

ஆடியபாதம் சந்தையின் பொருட்டு கேள்வி விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்ள விரும்பின் கேள்விக்காரர் 1,00,000/-ற்குக் குறையாது வங்கியில் வைப்பில் உள்ளதற்கான ஆதாரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

★ இக் கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| சந்தை இறைச்சிக் கடைகள் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய குறைந்த தொகை |
|---|---|---|---|
| நல்லூர் உப - அலுவலகம் | | | |
| 01. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல.1 | 350/- | 3000/- | 45,000/- |
| கொக்குவில் உப - அலுவலகம் | | | |
| 01. கொக்குவில் ஆடியபாதம் சந்தை | 500/- | 5000/- | 95,000/- |
| 02. கொக்குவில் உப - அலுவலகம் ஆட்டிறைச்சிக் கடை | 350/- | 3000/- | 40,000/- |
| 03. ஆடியபாதம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 350/- | 3000/- | 45,000]- |
| 04. கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக் கடை | 350/- | 3000/- | 8,000/- |
| 05. ஆடியபாதம் சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 350/- | 3000/- | 6,000/- |

க. மணிபல்லவராஜன்
(ஜே. பி. யூ. எம்)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
07-12-99.

(இ/10134)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
12
—
04
—
1921



உதிர்வு
21
—
11
—
1998

### திருமதி சின்னத்தம்பி கற்பகம்
(அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி)

திதி: 09-12-1999

எங்கள் அன்புத் தெய்வமே அம்மா!
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் -உங்கள்
நினைவு எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது.

அன்புடன் நினைவு கூரும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

[71600]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கல்வி நிலை

யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சி கண்டு வருகிறது. அவர்களின் தொழில் நுட்ப அறிவுத் திறன் பின்தங்கிய நிலையில் உள்ளது. ஆங்கிலக் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழாவில் மேற்படி மூன்று அம்சங்களையும் எடுத்துக் கூறியுள்ளார் கோப்பாய்ப் பிரதேச செயலர் சு. கேதீஸ்வரன்.

அண்மைக் காலமாக, சமூக நலனில் நாட்டங்கொண்ட பலரும் யாழ்ப்பாணத்து மாணவர்களின் கல்வித் தரம் குன்றி வருவது குறித்துக் கவலை தெரிவித்து வருகிறார்கள். யாழ்ப்பாணச் சமூகத்தின் உயர்ச்சியிலும் வாழ்க்கை வளத்திலும் கடந்த பல தசாப்தங்களாக பெரும் பங்களித்தது கல்வியே; அதன் தரமே.

ஆனால் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முந்திய தரத்துடன் ஒப்பிட்டால் கூட, இன்றைய கல்வித் தரம் மிகவும் கீழே நிற்கிறது. வருடாந்தம் தேய்ந்து வருகிறது. இதனை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளைக் கல்விப் பகுதி அதிகாரிகளும், ஆசிரியர்களும் இன்னும் கைக்கொண்டதாக இல்லை. கருத்தரங்குகள். வழிகாட்டுதல் வகுப்புகள் என்று பலவகையறாக்களும் நடைபெறுகின்றன. ஆனால் வீழ்ந்து போன கல்வித் தரம் இன்னும் தலையை உயர்த்துவதாக இல்லை.

விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சியும் அவற்றுக்கான அறிவுத் திறனும் ஏனைய நாடுகளில். ஏன் கொழும்பில் கூட, மிக வேகமாக முன்னேற்றம் கண்டு வருகின்றன. ஆனால் எமது பிரதேசத்தில் அவை மிகவும் மந்த நிலையிலேயே உள்ளன.

கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு எவ்வாறு ஆக்கபூர்வமான நடைமுறைத் திட்டங்கள் அவசியமோ, தொழில்நுட்ப அறிவுத்திறன் ஊட்டுதலும் அதே சம அளவு முக்கியமானது. அறிவுத் தேடலின், வாழ்க்கை வள விருத்தியின் இரு கண்கள் என அவற்றைக் கொள்ள வேண்டும். ஏட்டுக் கல்வியோடு இணைத்து இளைய சந்ததியினருக்கு தொழில்நுட்ப அறிவுத்திறனும் ஊட்டப்பட வேண்டும்.

மூன்றாவது ஆங்கிலக்கல்வி சுயமொழிமூல பாடபோதனை நடைமுறைக்குவந்த பின்னர் ஆங்கிலக் கல்வியை உதாசீனம் செய்யும் மனப்போக்கு மாணவரிடையே வளர்ந்தது. பாடத் திட்டங்களும் அவை வழி நடக்கும் பாடசாலைகளும் மாணவரின் மனப்போக்கை வளர்த்தன. ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்ந்து மாணவருக்கு அதில் அடிப்படைஅறிவை ஊட்டவேணும் உகந்த, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை. ஆங்கிலத்தில் தேர்ச்சி இல்லாவிட்டாலும் பரீட்சையில் சித்தி பெறலாம்; பல்கலைக்கழகமும் போகலாம் என்ற எண்ணம் மாணவர்கள் மனதில் வளர்ந்தது.

இவற்றின் பாதகமான விளைவை இப்போது எமது இளைய சமூகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. ஆங்கில அறிவு இன்றி அடுத்த நூற்றாண்டில் கருமமாற்றுவது கஷ்டமாயிருக்கும். ஆகையால் ஆங்கிலப்போதனைக்கு 1956ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தது போன்று முக்கியத்துவம் கொடுப்பது அவசியம். புதிய கல்வித் திட்டம் அதனை ஓரளவு பூர்த்தி செய்ய முயன்றாலும், இதுவரை பாதிக்கப்பட்டவர்களுக்கு திட்டமிட்ட மாற்று ஏற்பாடுகள் மூலம் ஆங்கில போதனைக்குக் கல்விப் பகுதி ஏற்பாடு செய்வது மிகமிக அவசியம்.

# பயிரிட அனுப்பப்பட்ட விதை உ.கிழங்கு

# கடையில் உணவுக்கு விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ. 9

உருளைக்கிழங்குச் செய்கைக்கென கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட விதை உருளைக்கிழங்கு யாழ்ப்பாணக்கடைகளில் கறி சமைப்பதற்காக விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து 150 மெ. தொன் விதை உருளைக் கிழங்கு தனியார் துறையினால் கப்பல் மூலம் தருவிக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான விவசாயிகள் இந்த விதை உருளைக்கிழங்கினை பெறுவதற்கு முற்பணம் கட்டியிருந்தனர். இப்படிப் பெறப்பட்ட விதை உருளைக்கிழங்கே தற்பொழுது உணவுத் தேவைக்காக சந்தைக்கு வந்துள்ளன.

செய்கை பண்ணப்படுவதற்கென இரசாயன மருந்துகள் போடப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் இந்த விதை உருளைக்கிழங்குகள் மனித உணவுக்கு ஏற்றவை அல்லஎன்று சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதனை உட்கொள்வதால் மனிதர்களுக்கு நோய்கள் ஏற்படலாம் என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது.

[இ-5]

## கப்பலில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 9

நேற்றுக் காங்கேசன் துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக்கப்பல் மூலம் குடாநாட்டுக்கான 150தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேவேளை—

குடா நாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 60 தபால் பொதிகள் இந்தக் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

[இ-9]

# சந்திரிகாவைஆதரிக்கக்கோரும் சுவரொட்டிகள், பிரசுரங்கள்

குருநகர், டிசெ. 9

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் சுவரொட்டிகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன

குடியிருப்பாளர்களின் வீடுகள். பொதுஇடங்களில் சந்திரிகாவின் மூவர்ணப்படத்துடன் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் கட்சியின் கொடி ஏற்றப்பட்டுள்ளதுடன் அலுவலகத்துக்கு முன்பாகவுள்ள வீதி சிவப்பு, நீலக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அந்த வீதி ஊடாகச் செல்பவர்களுக்கு தமது கட்சிக்கு ஆதரவு தெரிவிக்குமாறு கோரி துண்டுப் பிரசுரங்களை சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் விநியோகித்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரச் கட்சி யாழ். மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடத்தி வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# அவரை நிராகரிக்கக் கோரும் பிரசுரங்களும் விநியோகம்

யாழ்ப்பாணம். டிசெ. 9

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவை நிராகரிக்குமாறு கோரும் துண்டுப் பிரசுரங்கள் குடாநாட்டில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

யாழ் மக்களுக்கோர் வேண்டுகோள்என்ற தலைப்புடன்விநியோகிக்கப்பட்டுள்ள இந்தத் துண்டுப் பிரசுரம் தமிழின விடுதலை விரும்பிகள் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது.

நடக்கப்போகின்ற தேர்தலை எல்லோருமாகச் சேர்ந்து புறக்கணியுங்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ள அந்தத்துண்டுப்பிரசுரத்தில்—

மீண்டும் ஒருமுறை ஆட்சி பீடம் ஏறிவிடலாம் என்று சந்திரிகா நினைத்து அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் —

தமிழர் வரலாற்றில் எத்தனையோ சிங்கள ஆட்சியாளர்கள் மாறி மாறி வந்த போதும், எங்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு என்பது எவராலுமே எட்டிவிட முடியாது போய்விட்டது. ஆனாலும் எத்தனையோ சிங்கள ஆட்சியாளர்களை தமிழர் தேசம் கண்டுகொண்ட போதும் மிகவும் கொடிய இரத்தமும், கண்ணீரும் தோய்ந்த அவல வாழ்வை தமிழர்களுக்கு அள்ளித்தந்தவர் சந்திரிகாவே தான் என்பதை மறந்துவிடாதீர்கள்—

சமாதானம் அதற்கே போர் என்று உலகை ஏமாற்றி தமது ஆசனத்தை மீண்டும் கைப்பற்றி அவர் ஆட்சியைக் கைப்பற்றினால் செம்மணிகள் தொடரும் என்பதை மறந்து விடாதீர்கள் — என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

சந்திரிகாவுக்கு ஆதரவாகச் செயற்படும் தமிழ்க் கட்சிகளும் அந்தப் பிரசுரத்தில் விமர்சிக்கப்பட்டுள்ளன.

# ‘கீதம்’ இலக்கியப் போட்டி

கொக்குவில், டிசெ 9.

பேராதனைப் பல்கலைக் கழக சங்கீத நாட்டிய சங்கம் நடத்தும் ‘‘கீதம்’’ மாபெரும் இலக்கியப் போட்டி பாடசாலை, பல்கலைக்கழக மட்டங்களிலும் இவைசாராத மட்டத்திலும் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் ஈடுபடுத்தும் சிறுகதை காலத்தைப் பிரதிபலிப்பதாகவும் யதார்த்தமாகவும் இருத்தல் வேண்டும்.

பாடசாலை மட்ட கட்டுரைகள் ‘‘புதிய கல்விச் சீர்திருத்தம்’’, ‘‘இன்றைய வாழ்வை மேம்படுத்துவதில் கலை, இலக்கியங்களின் பங்களிப்பு’’ என்கின்ற தலைப்புகளில் ஒன்றாகஅமைவதோடு 350 சொற்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக மட்ட கட்டுரைகளின் ‘‘அடுத்த ஆயிரமாம் ஆண்டின் நற்றமிழ்’’ ‘‘தமிழ் இசை வளர்ச்சியில் புதிய முன்னேற்றங்கள்’’ எனும் தலைப்புகளில் ஒன்றாக அமைவதோடு 600 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

ஏனையோர் மட்ட கட்டுரைகளின் ‘‘தனியார் தொலைக்காட்சி.வானொலி சேவையும் மக்கள் வாழ்வில் அதன் தாக்கங்களும்’’ ‘‘21 ஆம் நூற்றாண்டில் புலம் பெயர் தமிழர்களின் வாழ்வியல் நிலை’’ எனும் தலைப்புகளில் ஒன்றாக அமைவதோடு 600 சொற்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

கவிதைப் போட்டியில் பங்குபற்றும் கவிதைகள் சமகாலத்தைப் பிரதிபலிப்பனவாகவோ, எதிர்காலத்தை எதிர்வு கூறுவதாகவோ இருப்பதுடன் மரபுக் கவிதையாயின் 40 வரிகளுக்குள்ளும் புதுக் கவிதையாயின் 80வரிகளுக்குள்ளும் அமைதல் வேண்டும்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவோர் தமது ஆக்கங்களை ‘‘கீதம் இலக்கியப் போட்டி’’, தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக் கழகம் எனும் முகவரிக்கு அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(க-69)

## கடற்றொழில் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

1990 ஆம் ஆண்டு முதல் செயலிழந்திருந்த யாழ் கடற்றொழிலாளர் பயிற்சி நிலையத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த பயிற்சி நிலையத்தில் கடமையாற்றுவதற்காக இரு அதிகாரிகள் கடற்றொழில் அமைச்சின் பயிற்சிப் பணிப்பாளரினால் யாழ். மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கடந்த ஒக்ரோபரில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

கடற்றொழில் பயிற்சி நிலையத்தைத்திறப்பதற்காக தனியார் வீடு ஒன்று வாடகைக்கு பெறப்படவுள்ளது.

இதேவேளை இப்பயிற்சி நிலையத்தில் வெளிக்களப் பயிற்சி கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ் கடற்றொழில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

[இ-5-8]

## பயிற்சி நடைபெறாது

மானிப்பாய் - வலி. தென் மேற்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவிருந்த இசையும் அசைவும் பயிற்சி நடைபெறமாட்டாது என மானிப்பாய் பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி அதிகாரி வே. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

(இ.185)

# தபால் மூல வாக்களிப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாடு முழுவதிலும் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல அரச திணைக்களங்களிலும் தபால் மூல வாக்களிப்பு நேற்று முன்தினம் ஆரம்பமாகிய போதும் பெரும்பாலான திணைக்களங்களில் குறைந்த எண்ணிக்கையினரே தமது வாக்குகளை அளித்ததாக அறிய முடிந்தது.

இன்றும் தபால்மூல வாக்களிப்பு தொடர்ந்து இடம் பெறும்.

தபால்மூல வாக்களிப்புக்கு மூன்று தினங்கள் ஒதுக்கப்பட்ட போதிலும் தேவை கருதி 17 ஆம் திகதி வரை வாக்களிக்க முடியும் என்று தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்திருக்கிறது.

(இ-7-51)

## நாளை

கார்த்திகை 24

வெள்ளிக்கிழமை

திதி: துதியை முற்பகல் 8.36 வரை

நட்சத்திரம்: பூராடம் பின் இரவு 2.35 வரை.

சுபநேரம்: 6.19—7.49

ராகுகாலம்: 10.49 – 12.19

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## மருந்தகக் கிளை திறப்பு

கொழும்புத்துறை, டிசெ. 9

வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் ஆயுர்வேத மருந்தகத்தின் நான்காவது கிளை பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராஜாவினால் திறந்து வைக்கப்பட்டது.

(க- 30)

### உதய வாக்கு

தனக்கு என்று ஏற்றுக் கொண்ட நல்ல நெறியே

ஔவையார்

# சாயி சிந்தனை

அன்புதான் கடவுளின் திருவடிவம். ஆனால் இன்று மனிதன் இப்புனித அன்பைத் தவறாகப் பயன்படுத்துகிறான்.

உலகாயதமான, நிரந்தரமற்ற உலகியல் பொருள்கள் மீது அன்பு வைக்கிறான்.

அன்பின் சக்தியை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள்.

பண்டைக் காலத்தில் ரிஷிகள் அடர்ந்த கானகங்களில் தனிமையில் வாழ்ந்து, கொடிய காட்டு மிருகங்களுடன் கூட இசைந்து வசிக்க முடிந்தது. அதற்குக் காரணம் அவர்களது அன்பின் சக்தி.

இந்த உலகில் அன்பினால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை.

கடினமான பாறைகளையும் கூட அன்பினால் இளக வைக்க முடியும். ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கும் அன்புத்தத்துவம், ஒருங்கிணையும் போது அது பிரபஞ்சப் பிரேமையாக, விஸ்வப் பிரேமையாக மாறிவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்து விழும் ஆபத்தான நிலையில் வல்லைப் பாலம்

## புதிய பாலம் அமைக்கும் வேலை மந்தகதியில்

வடமராட்சி, டிசெ. 9

யாழ்ப்பாணம் வலிகாமப் பிரதேசங்களை வடமராட்சிப் பிரதேசத்துடன்இணைக்கும்வல்லைப்பாலம் உடைந்து விழும் ஆபத்தான நிலையில் உள்ளது என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை நெடுஞ்சாலையில் உள்ள இந்தப் பாலம் உடனடியாக திருத்தப்படாவிட்டால் இதனூடாக சென்று வரும் வாகனங்கள் கடலுக்குள் புரளக்கூடிய அபாயமும் இருந்து வருகிறது.

1994 ஆம் ஆண்டு முதல் பலத்தசேததமடைந்த நிலையில்இருக்கும்இந்த பாலத்தை உடனடியாகத் திருத்துமாறு பெருந்தெருககள் திணைக்கள பொறியியலாளர் ஈ பி.டி பி அமைப்பின் தலைவர் ஆகியோருக்கு சுட்டிக் காட்டப்பட்டும் ஒரு வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென இலங்கை செஞ்சிலுவைச்சங்க பருத்தித்துறைப் பிரிவின் செயலாளர் எஸ் தவராசா தெரிவித்தார்.

சேதமடைந்த இந்த பாலத்தினூடாக வாகனங்கள் செல்லும்போது விபத்து ஒன்று ஏற்பட்டால் 60-க்கு மேற்பட்ட பயணிகள் பலியாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்றும் இதுபோன்ற துர்ப்பாக்கிய நிலைக்கு இட கொடுக்காது சேதமடைந்த பாலத்தை உடன் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் நெடுஞ்சாலைத் திணைக்களம், ஈ.பி.டி.பி அமைப்பு ஆகியவற்றை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

இதேவேளை இப்பாலத்துக்குப்பதிலாக புதிய பாலம் ஒன்றை அமைக்கும் பணி மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த வருடம் ஆரம்பமான புதிய பாலம் அமைப்பதற்கான ஆரம்ப பணிகள் இரு வருடங்களாகியும் இன்னமும் பூர்த்தியாகவில்லை.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்படும் அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்கள பருத்தித்துறையிலிருந்து வாகன அணித் தொடர் மூலம் இப்பாலம் ஊடாகவே யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-30-173)

## மாணவியைக் காணோம்

யாழ்ப்பாணம், டிசெ, 9

கோப்பாய் வடக்கில் மாணவி ஒருவர் காணாமல் போய்விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் உறவினர்களால் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த பரமலிங்கம் மோகனவரசி [வயது 14] என்ற மாணவியே காணாமல் போனவராவார்.

கடந்த 4 ஆம் திகதி வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்ற இவர் திரும்பி வரும் பொழுது காணமல்போய் விட்டதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-10-5]

## பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 9

கமநல சேவைகள் திணைக்கள பட்டதாரிப் பயிலுநர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்கு நேற்று திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ் விவசாயிகள் கூடம் [கொவி செவன] கட்டடத்தில் ஆரம்பமாகியது.

இதில் கமநல சேவைத் திணைக்களத்தில் புதிதாக நியமனம் பெற்ற 12 பட்டதாரிகள் பயிற்சி பெறுவர். [இ-9]

## தையல் பயிற்சி வகுப்பு

வலி. கிழக்கு, டிசெ. 9

கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் எதிர்வரும் 15 ஆம் திகதி பெண்களுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்பு ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. [இ-180]


## உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் எனக்கு உதவிக்கரம் நீட்டுங்கள்

### கொக்குவில் லயன்ஸ் கழகம் விடுக்கும் அன்பு வேண்டுதல்



சுந்தரலிங்கம் பபிகலாவுக்கு

'இருதயத்தில் ஓட்டை' உள்ளது. எனினும் சத்திர சிகிச்சை மூலம் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியும். அரசினர் வைத்தியசாலையில் இச் சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியாததாலும் அவர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாலும் எமது கழகத்தின் உதவியை நாடியுள்ளார். ஆகவே அதற்கான நிதியை எமது கழகம் திரட்ட முன்வந்துள்ளது.

கருணை மனம் படைத்த அன்பு சால் நெஞ்சங்கள் எமக்கு உதவி செய்வதன் மூலம் ஓர் உயிரைக் காப்பாற்றிய பெரும் புண்ணியத்தைப் பெற்றவர்களாவீர்கள்.

நிதி செலுத்த விரும்பியவர்கள் இலங்கை வங்கி மானிப்பாய் க/இலக்கம் T 2562 க்கு காசாகவும் காசோலையாகவும் செலுத்த முடியும். அதற்கான பற்றுச் சீட்டு அனுப்பி வைக்கப்படும்.

நேரடியாக எமது அங்கத்தவர்கள் தங்களிடம் நிதி சேகரிக்க வரும்போது தங்களால் ஆன உதவியை அளித்து உயிரைக் காப்பாற்றிய பெருமையை அடைவீர்களாக.

லயன்ஸ் கழகம்
கொக்குவில்.

(சி/10142)



## பூப்புனித நீராட்டு விழா

**♠♠♠♠♠**♠♠♠♠♠**♠♠♠♠♠**♠♠♠♠♠**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 24 ஆம் நாள் (10-12-1999) வெள்ளிக்கிழமை பூராட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 6 19 மணி முதல் 7 07 மணி வரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரி திருநிறை செல்வி

**அனுஜா** அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

செல்லத்துரை குடும்பத்தினர்

திருமால் இல்லம்,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(71645)



## திருமறைக் கலாமன்றம் நாடகப் பயிலகம் - 2000 SCHOOL OF DRAMA

எமது மன்றம் வருடாந்தம் நடத்துகின்ற 'நாடகப் பயிற்சி நெறிக்கான' 2000 ஆண்டுக்கான விண்ணப்பங்கள் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன. இப்பயிற்சி நெறியானது

- ★ நாடகம் அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புபவர்களுக்கும்,
- ★ 'நாடகமும் அரங்கியலும்' பாடத்தை கற்கை நெறியாகக் கொண்டவர்களுக்கும் உதவக்கூடியது.

விண்ணப்ப முடிவு திகதி 31-12-1999

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி:

'நாடகப் பயிலகம்'
திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(10143) தொ. பே. இல. 2393


## இதய அஞ்சலி

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய அபிவிருத்திச் சங்க உறுப்பினரான சதாசிவம் பிறேம்குமார் அவர்களின் அன்புத் தந்தை

### வேலுப்பிள்ளை சதாசிவம்

அவர்கள் 04-12-99 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

[சி/10145]

## கண்ணீர் அஞ்சலி

எமது கொம்றெக் திருவன பணிப்பாளர் சபைத் தலைவரும் சங்கானை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகஸ்தருமாகிய

திரு. மூ. சிவராசா அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

### விரித்தாம்பாள் முத்துலிங்கம்


அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

கொம்ரெக்,
சித்தன்கேணி.

(71641)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 03 | 09 |
| — | — |
| 10 | 11 |
| — | — |
| 1927 | 1999 |

### அமரர் சின்னப்பு மார்க்கண்டு

கடந்த 09-11-99 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று 09-12-99 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

38. பாரதி வீதி,
கச்சேரியடி, அரியாலை.

(சி/ 10148)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். தேர்தல் ஏற்பாடுகளில் 5,000 அரச ஊழியர்கள்

யாழ்ப்பாணம், டிசெ 9

யாழ் மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான கடமைகளில் 5 ஆயிரம் அரச ஊழியர்கள் வரை ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

யாழ் செயலகம் உட்பட அரச திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்களே தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு தற்பொழுது தெரிவு நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலையொட்டி யாழ் செயலக ஒய்வூதிய திணைக்கள வேலைகள் கடந்தவாரம் முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது மேலும் சில திணைக்கள வேலைகளும் நிறுத்தப்பட்டு அங்குள்ள ஊழியர்கள் அனைவரும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

யாழ். செயலகத்திலுள்ள தேர்தல் திணைக்களத்துக்கு கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு செயலகத்தில் தற்காலிக பொலீஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது

வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் வேலைகளும் ஆங்காங்கே நடைபெற்றுவருகின்றன.

வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படுவதையொட்டி யாழ். பிரதம தபாலகத்துக்கும் கடந்த சில நாள்களாக பாதுகாப்புவழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்கென வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் எண்பது பஸ்கள் வரை ஒதுக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பிலிருந்தும் வாகனங்களைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன

தபால் மூல வாக்களிப்பு நேற்று முன்தினம் ஆரம்பமாகி இன்று வரை நடைபெறவுள்ளது. இந்தவாக்களிப்பின் போது யாழ். செயலகத்தினைச் சேர்ந்த எட்டு அதிகாரிகள் உதவித் தேர்தல் அதிகாரிகளாக கடமையாற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தபால் மூல வாக்களிப்பு யாழ் மாவட்டத்தில் அரச திணைக்களங்கள், பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் ஆகியவற்றில் தனித்தனியாக நடைபெற்று வருகின்றது. (இ-5-8)

## இளைஞர் கைது

யாழ்ப்பாணம், டிசெ 9

அச்செழு வடக்கு பகுதியை சேர்ந்த தங்கராசா சதீஸ் (வயது 22) என்ற இளைஞர் நேற்று படையினரால் கைது செய்யப்பட்டதாக அவரது உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது (உ-9)

# பளைப் பகுதிக் குளங்களில் நன்னீர் மீன் உற்பத்தி

## கொழும்பிலிருந்து குஞ்சுகள் தருவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ 9

நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் கடற்றொழில் திணைக்களத்தினால் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி மீன் குஞ்சுகள் அண்மையில் பளைப் பகுதியிலுள்ள குளம் ஒன்றில் விடப்பட்டன

ஒலிகட்டளை அதிகாரியின் ஏற்பாட்டில் அண்மையில் கடற்றொழில் அமைச்சின் கீழுள்ள நன்னீர் மீன்பிடி அதிகார சபைப் பணிப்பாளர் நாயகம் பளைப் பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள குளங்களைப் பார்வையிட்டார்.

இவரது விஜயத்தின் பின்னர் பளையிலுள்ள குளங்களில் நன்னீர் மீன் உற்பத்தியை மேற்கொள்ள முடியும் என சிபார்சு செய்யப்பட்டதைத் தொடர்ந்து விமானம் மூலம் ஒரு தொகுதி மீன் குஞ்சுகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இப்பகுதியில் உள்ள குளங்களில் நன்னீர் மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கொழும்பிலிருந்து மீன் குஞ்சுகள் கொண்டு வரப்படவுள்ளதாக கடற்றொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-5)

# பிரதேச செயலர் பிரிவு ரீதியாக கூ. சங்கங்கள் கணக்கெடுப்பு

அரியாலை, டிசெ 9

யாழ் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் கணக்கெடுக்கும் நடவடிக்கையை மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் மாவட்டத்தில் செயற்படாமல் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களை மீளவும் புனரமைத்து இயங்க வைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் —

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீளக்குடியமர்வுக்கு பின்னர் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் குறித்த ஆவணம் பட்டியல் மூலம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் —

மாவட்டத்தில் இதுவரை ஆயிரத்து 129 கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுத் திணைக்களத்தில் முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (க-17)

# சைக்கிள் திருடும் குழு பொலீசாரிடம் சிக்கியது

வலிகாமம் தெற்கு, டிசெ. 9

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வந்த சைக்கிள் களவுகளின் சூத்திரதாரிகள் எனக் கருதப்படும் மூவரை சுன்னாகம் பொலீசார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து களவாடப்பட்டதாகக் கருதப்படும் பன்னிரெண்டு சைக்கிள்களையும் பொலீசார் மீட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக சண்டிலிப்பாய் கிழக்கில் இரண்டு சகோதரர்களையும் அவர்களின் கூட்டாளியான அளவெட்டியை சேர்ந்த நபர் ஒருவரையும் பொலீசார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், தென்மராட்சி போன்ற இடங்களில் இவர்கள் சைக்கிள்களை களவாடியதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் ஆறாம் திகதி உடுவில் அம்பலவாணர் வீதியில் பாடசாலையில் இருந்து வீடு நோக்கி சென்ற சிறுமி ஒருவரின் சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவத்துக்கும் தாங்களே பொறுப்பு என்று இந்த நபர்கள் பொலீசாரிடம் ஒப்புக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

பொலீசாரால் மீட்கப்பட்ட 12 சைக்கிள்களும் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. (உ-152)

## பயிற்சி நெறி நிறைவு நாள்

சுழிபுரம், டிசெ. 9

பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் ஆதரவில் பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடத்தப்பட்டு வந்த உள்ளூர் விவசாய விளைபொருள்கள் பதனிடும் பயிற்சிநெறியின் நிறைவு நாள் நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் கா. சந்திராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-7-28)

# இலவசக் கல்வியின் தந்தை உண்மையில் ஆறுமுக நாவலரே

## நாவலர் குருபூசையில் உரை

நல்லூர், டிசெ 9

இலவசக் கல்வியின் தந்தை சன்னங்கர என்றே நாம் கூறுகிறோம், உண்மையில் இலவசக் கல்வியின் தந்தை நாவலரே. 1840களில் இலவசமாகப் பாடம் சொல்லித்தந்தவர்; பஞ்சித்தொட்டி அமைத்துக் கல்வி தந்தவர் அவர்

நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்ற நாவலர் குருபூசையில் பேசிய ஆறு திருமுருகன் மேற்கண்டவாறு கூறினார்.

துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நாவலர் குருபூசை நடைபெற்றது

ஆறு. திருமுருகன் மேலும் பேசும்போது கூறியதாவது:-

ஒரு புனிதமான சமூகப்பண்பாட்டைக் கட்டிக் காத்த உத்தமராக விளங்கிய நாவலர் சமூகத்துக்கு ஆற்றிய தொண்டுகளை உலகம் அறியும். இந்தியாவின் மூத்த அறிஞர்கள் ஈழத்து அறிஞர்களிடம் கடன்பட்டோம் என்று கூறும், எழுதும் நிலையை உருவாக்கியவர் நாவலரே.

இந்தியர்கள் கூறுகிறார்கள் நீங்கள் அழகு தமிழ் பேசுகிறீர்கள் அருந்தமிழ் பேசுகிறீர்கள் என்று.

யாழ்ப்பாணத்தில் பேசப்படும் தமிழ்தான் சுத்தமான தமிழ் என்று.

இன்று ஏனையோர் அப்படிப் புகழ்வதற்குக் காரணம் நாவலரே.

கல்வியில் சிறந்த குடும்பத்தில் ஒருவராக வந்தவர் நாவலர். அவர் தனது தந்தையார் எழுதிய 'காப்பிய மூலம்' என்னும் நாடகத்தை தந்தையார் இறந்த பின் எழுதி முடித்தார். மிகவும் சிறுவயதிலேயே அந்தப் பணியை முடித்த அவரது திறமையைக் கண்டு சகோதரர்கள் ஆங்கிலக் கல்வியில் மேலும் புலமை பெறக் கூடியதாக யாழ். மத்திய கல்லூரியில் அவரைச் சேர்த்தனர்.

யாழ். மத்திய கல்லூரியில் பேர்சிவல் பாதிரியார் பல கேள்விகளால் அவரைத் துளைத்தெடுத்த போதும் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளித்த அவரது ஞானத்தைக் கண்டு கல்லூரியில் சேர்த்ததுடன் தனக்குத் தமிழ் கற்றுத் தரும்படியும் நாவலரிடம் கேட்டுக் கொண்டார். ஒரு 16 வயதுச் சிறுவன் பேர்சிவல்பாதிரியாருக்கு தமிழை மிகவும் சிறந்த முறையில் கற்று கொடுத்தான் என்பது குறிப்பிடத்தக்கது

தமது சமயத்தை இலகுவாக வளர்க்கக் கூடியதாக அவரைப் பயன்படுத்த முனைந்த பேர்சிவல் நாவலருக்கு இந்தியா செல்ல வேண்டும் என்ற ஆசை இருப்பதைத் தெரிந்து கொண்டு அவரை இந்தியாவுக்கு அழைத்துச் சென்றார். அங்கே பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியையும் அவரிடம் ஒப்படைத்தார்.

யாழ்ப்பாணத்திற்கு ஒரு சைவத்தமிழ் அச்சகம் தேவை என்பதை உணர்ந்துகொண்ட நாவலர் இந்தியாவில் இருந்து பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் அதனை எடுத்துவந்துமாணவர்களுக்கு பாட நூல்களை இலவசமாக விநியோகித்தார். பாடங்களிலும் பார்க்க உரைநடைகளையே மக்கள் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும் என்பதால் பல உரைநடைகளை அவர் எழுதினார். சைவ நூலகளைக் காப்பாற்றவும் சிறுவர்களிடையே சமய உணர்வுகளை ஏற்படுத்தவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த அவர் திருமுருகாற்றுப்படை, திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் போன்றவற்றை வசன நடையில் அமைத்துத் தந்துள்ளார்.

தான் பிடியரிசி பெற்ற இடங்களில் எல்லாம் பாடசாலைகளை அமைத்து சைவமும் தமிழும் தழைக்க அருந்தொண்டாற்றிய நாவலர் இந்தியாவுக்குச் சென்ற சமயம் திருவாவடுதுறை ஆதீனம் அவரைக் கௌரவித்து நாவலர் என்னும் சிறப்புப்பட்டத்தையும் அவருக்கு வழங்கியது.

சிதம்பரத்தில் அவரால் அமைக்கப்பட்ட பாடசாலையில் அவர் பாவித்த பொருள்கள் இன்னும் பேணிக்காக்கப் படுகின்றன ஈழத்து அறிஞர்கள் என்று ஒரு நீண்ட பட்டியலை இந்தியா சொல்வதற்கு நாவலரின் பணிகளே காரணம். இவ்வாறு அவர் கூறினார்.

### துர்க்கா துரந்தரி

துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி தமது தலைமை உரையில் கூறியதாவது:

எங்களை எல்லாம் சைவ நெறியில் நின்று வாழக் குருபூசைகளை ஆலய வழிபாடுகளை முறைப்படி செய்ய வழிகாட்டிய நாவலர் பெருமானுக்கு வருடம் தோறும் நல்லூரில் குருபூசை செய்ய வேண்டும் என்பதே இந்த மண்டபம் அமைத்ததின் முக்கியகுறிக்கோள் ஆகும்.

அவர் எமது சமயத்தின் வளர்ச்சிக்கும் மொழியின் உயர்வுக்குமாக ஆற்றிய பணிகள் எக்காலத்திலும் நினைவு கூரப்படவேண்டும்.

இன்று எங்கெல்லாம் தமிழர்கள் வாழுகிறார்களோ அங்கெல்லாம் அவரது குருபூசைகள் இடம்பெறுகின்றன. தமிழர்கள் தாங்கள் பல்வேறு இடையூறுகளின் மத்தியிலும் இடம்பெயர்ந்த வேளையிலும்கூட நாவலர் பெருமான் ஆற்றிய பணிகளை மறக்காமல் உள்ளனர் என்பது தமிழுக்குப் பெருமை தருகிறது.

நாவலரை மறந்தால்நமக்கு உலகமே இல்லை நாவலர் விட்டுச் சென்ற பணிகளை நினைவு கூருவதுடன் அவரது நினைவுச் சின்னமாக விளங்கும் இடங்களையும் பேணிப் பாதுகாப்போம் — என்றார்.

துர்க்கா மகளிர் இல்ல மாணவி செல்வி கோகிலா ராமகிருஷ்ணனும் பேசினார்.

துர்க்கா மகளிர் இல்ல மாணவிகளின் இசை நிகழ்வும் இடம்பெற்றது

[இ-111]

# வன்னிப் பகுதிக்கு உணவு உடன் அனுப்பக் கோரிக்கை

## ஜயலத் எம். பி. ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, டிசெ 9

வன்னியில் மடுவிலும் ஏனைய இடங்களிலும் உணவு, மருந்து மற்றும் பால்மா இன்றிக் கஷ்டமுறும் அப்பாவி மக்களுக்கு உடன் அவற்றை அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா ஜனாதிபதியைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மடுவிலும், ஏனைய இடங்களிலும் உள்ள ஆயிரக் கணக்கான அகதிகள் உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் இன்றிக்கஷ்டப்படுவதாக அங்கிருந்து செய்திகள் வெளியாகின்றன.

அப்பாவி மக்கள் படும் இன்னல்களை, அவலங்களை நேரில் அறிய அங்கு செல்ல அனுமதிக்குமபடி கேட்டிருந்தேன் ஆனால் எனக்கு அனுமதி வழங்கப்படவில்லை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை அங்கு அனுப்பும்படியும், அவர்மூலம் விவரங்களைப் பெறும்படியும் நான் கேட்டிருந்தேன். ஆனால் அரசு அதையும் செய்யவில்லை.

கடந்த நான்கு வருடங்களாக அடிப்படைவசதிகள் இன்றி கஷ்டமுறும் யுத்தப் பிரதேச மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை அரசாங்கம் ஏன் மறுத்து வருகின்றது என்பது தெரியாமல் உள்ளது. மனிதாபிமான உதவிகள் அந்த மக்களுக்குக் கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் — என்றுள்ளது

[ஐ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருட்...**

(முதலாம் பக்கத் தொடர்)

இதேவேளை—

பல்கலைக்கழகத்தில் உலா வரும் 'ராகிங் சாத்தான்' களின் உத்தரவுக்குக் கீழ்ப் படிந்து புகுமுக வகுப்பு மாணவர்கள் கடந்த சில நாள்களாக வேட்டி அணிந்து காலில் சிலிப்பர்களுடன் பல்கலைக்கழகத்துக்குச் செல்வதைக் காணக் கூடியதாகஉள்ளது. (உ-9)


வீடியோ CD வெளியீடு!

பிரபுதேவா - ரம்பா நடித்த

நீ எனக்கு உயிரம்மா

விஷ்ணு வீடியோ

K.K.S. றோட், கோண்டாவில்.

(71652



SALE

New Sony 45"

(Projector T.V)

விற்பனைக்கு

தொடர்பு;

154. கன்னாதிட்டி வீதி. யாழ்ப்பாணம்.

(71659)



எமது புதிய வீடியோ CD வெளியீடு!

பிரபுதேவா - ரம்பா நடிக்கும்

நீ எனக்கு உயிரம்மா

பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்.

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்,

(சி/10153)



பிரபுதேவா - ரம்பா நடிப்பில்

நீ எனக்கு உயிரம்மா

பிரதிகளை அனைவரும் இப்போதே பெறலாம்.

எங்கள் முயற்சி உங்கள் மகிழ்ச்சி

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்,

பெரியகடை, யாழ்ப்பாணம்.

(71657)


# நேற்று யாழ். நகரில்

# ரணிலை ஆதரிக்கும் பிரசுரங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கக் கோரும் பிரசுரங்கள் நேற்று மாலை யாழ் நகரில் விநியோகிக்கப் பட்டன.

துண்டுப் பிரசுரங்களுடன் ரணில் விக்கிரமசிங்கவின் வர்ணப்படத்துடனான கலண்டர்களும் விநியோகிக்கப்பட்டன

கடந்த 5 வருடங்களாக நாட்டின் ஜனாதிபதியாக சந்திரிகாகுமாரதுங்கவை நீங்க வைத்திருந்தீர்கள் அவர் சொல்லாலும் செயலாலும் எமது நாட்டின் பெயரைக் கெடுத்துள்ளார். உங்கள் பணத்தின் பெறுமதியையும் குறைத்துள்ளார்.

இவ்வாறு நேற்று விநியோகிக்கப்பட்ட பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

செயல்திறன் இன்மையால் சந்திரிகா எமது நாட்டின் பொருளாதாரத்தைச் சீர் குலைத்தார். போரில்தேவையற்ற தலையீடுகளை ஏற்படுத்தி படைவீரர்களின் ஊக்கத்தைக் குறைத்துத் தனது சுயநலத்தினாலும் திறமையின்மையாலும் சமூகத்தின் பல பிரிவினரையும் ஆத்திரமடையச் செய்துள்ளார்.

எமது நாட்டின் நன்மைக்காக அவர் வெளியேற வேண்டும். அது உங்களுக்குத் தெரிந்ததே.

போரில் இருந்து விடுபட்ட இலங்கையை உருவாக்குவது ஒரு நீண்ட கடின முயற்சி. எனினும் அதைப் பொறுமையான பேச்சுவார்த்தைகளின் மூலம் அடைய முடியும்.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5-6)

## இரு குடும்பஸ்தர்...

(முதலாம் பக்கத் தொடர்)

ரது சடலங்களே இனங் காணப்பட்டுள்ளன.

மடுத்தேவாலயப் பகுதியில் தமது குடும்பத்தவர்களை தங்க வைத்து விட்டு, வீட்டில் பாவனைப் பொருள்களை எடுத்துச் செல்ல வந்த சமயமே இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக மன்னார்ச் செய்திகள் தெரிவித்தன.

மேற்படி இருவரது சடலங்களையும் விடுதலைப் புலிகளுடையவை எனத் தெரிவித்தே படையினர் ஒப்படைத்திருந்தனர் என வவுனியா ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-7-164]

## கல்முனை...

(முதலாம் பக்கத் தொடர்)

அடைந்தன.

சம்பவத்தில் காயமடைந்த இரண்டு பெண்கள் உட்பட 14 பேர் கல்முனை மற்றும் அம்பாறை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பை அடுத்து படையினர் அப் பகுதியில் தீவிர தேடுதல்களை மேற்கொண்டனர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப் பட்டது.

(உ-6-7-8-14)


இன்று பி.ப 4 மணிக்கு ஆரம்பம்

வழமையான ஆசிரியர் குழுவினால்

6 முதல் A/ வரை

றேடியன்ற் கல்வி நிறுவனம்

சுண்டுக்குளி.

(71633)


## கொடியேற்றம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னாலை அருள் மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாதக் கொடியேற்றத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிபத்துத் தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

சுவர்க்க வாயில் ஏகாதசி தினமான 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறு நாள் தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறும். (ஜ-30)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால்இறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

சென் நீக்கிலஸ் மைதானத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது கால் இறுதி ஆட்டத்தில் சென் அன்ரனீஸ் வி.க அணியும் சென் மேரிஸ் வி.க அணியும் மோதவுள்ளன. (உ-4)

## சிவில...

(முதலாம் பக்கத் தொடர்)

பந்தன் வெளியிட்ட செய்திக் குறிப்பில்—

சிவில் நிர்வாகிகளின் கடமைகள் படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவது அப்பகுதிகளில் சிவில் நிர்வாகம் முழுமையாக ஸ்தம்பிதமடையவே வழிகோலும் —

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் சிவில நிர்வாகக் கடமைகளில் பாதுகாப்பு அதிகாரிகளின் தலையீட்டைக் குறைத்து, பொதுமக்களுடன் கூடிய தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடிய சிவில் நிர்வாக அதிகாரிகளிடமே அந்தக் கடமைகள் ஒப்படைக்கப் படவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கோருகின்றது —

இந்தப் பிரதேசங்களிலுள்ள பாதுகாப்பு அதிகாரிகளின் தலையீடு சிவில் நிர்வாகத்தை குழப்புகின்றது என்ற கருத்து ஏற்கனவே நிலவி வருகின்ற இந்தவேளையில் இந்நியமனங்கள் செய்யப்படுவது பெரும் அதிருப்தியையே ஏற்படுத்துகின்றன — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-6]

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்)

மடைந்ததாகவும் —

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கடற் புலிகள் தரப்பில் 4 பேர் உயிரிழந்தனர் எனவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். [illegible]

## சிறுவர் பராமரிப்பு நிலையம் திறப்பு

தாய், தந்தையரை இழந்த சிறுவர்களைப் பராமரிக்கும் நிலையம் ஒன்று இன்று காலை 9 மணிக்கு கொழும்புத்துறை—ஆனந்தன் வடலி வீதியிலுள்ள கட்டடம் ஒன்றில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வடபிராந்திய சத்யசாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுவினால் நிறுவப்படும் இந்தச் சிறுவர் இல்லத்தில் தாய், தந்தையரை இழந்த 6 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் பராமரிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-7-30]

## பத்திரிகையாளர் அன்பளிப்பு

காங்கேசன்துறை தடை முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் கைதிகளின் பொழுதுபோக்குக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள் போன்றவற்றை வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

நேற்று காங்கேசன்துறை தடை முகாமுக்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ். ஸ்ரீகரன் இவற்றைக் கைதிகளிடம் கையளித்தார்.

# வரணிப் பகுதி வயலில் முதலையிடம் கடியுண்டவர்!

## மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதி

வயலுக்குச் சென்றுகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் முதலையினால் கடியுண்டு படுகாயமடைந்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் வரணி - தம்பளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வரணி - கரம்பைக்குறிச்சியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னராசா சிவராசா (வயது 32) என்பவரே இடது தொடையில் முதலையினால் கடியுண்டு படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனக்கு நேர்ந்த கதி பற்றி விவரிக்கையில் கூறியதாவது:

வயல் வேலை செய்து குடும்பத்தை நடத்தி வரும் நான் சம்பவ தினம் வழமைபோல் வரணி — தம்பளைப் பகுதியில் உள்ள வயலுக்கு நடந்து சென்றேன். வழியில் 5 அடி வரையில் தேங்கி நின்ற மழை வெள்ளத்தின் ஊடாகவே வயலுக்குச் செல்லும் நிலை இருந்தது.

மழை வெள்ளத்தின் ஊடாக நடந்து சென்ற வேளை மிருகம் ஒன்று திடீரென வந்து எனது காலில் கௌவியது. அச்சமுற்று நடுங்கிய நான் எனது காலைக் கௌவியது முதலை என்பதை உணர்ந்து கொண்டு, அது என்னை இழுத்துச் செல்லாதவாறு, எனது இரு கால்களையும் தண்ணீருக்குள் இறுக்கிப் பற்றிக் கொண்டு முதலையின் மூக்கின் துவாரத்தில் கைவிரல்களைச் செலுத்தி முகத்தை அழுத்திப் பிடித்தவாறு சத்தத்தை எழுப்பினேன்.

அப்போது அவ்வழியே வயல் வேலைக்குச் சென்றுகொண்டிருந்த எனது உறவினரான ஒருவர் அவ்விடத்துக்கு வந்து தான் வைத்திருந்த மண்வெட்டியின் பிடியினால் முதலையின் வாயில் இடித்தார். அச்சமயம் முதலை எனது தொடையை உதறி விட்டு ஓடி மறைந்தது.

இந்த முதலை எப்படி அப்பகுதிக்கு வந்து சேர்ந்தது என்பது புரியாத புதிராக உள்ளது — என்றார் அவர்.

(உ-7-109)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராமலிங்கம் திலகேஸ்வரி

ஆவரங்காலைச் சேர்ந்த திருமதி இராமலிங்கம் திலகேஸ்வரி நேற்று (8-12-99) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவசம்பு தம்பதிகளின் அன்பு மகளும் கதிரிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் கந்தசாமி, பாலசிங்கம், தனேஸ்வரன், சிவேஸ்வரி, அருளேந்திரன், யோகேஸ்வரி, உருத்திரன் ஆகியோரின் தாயாரும் சுசீலா, புஸ்பராணி, லோகாம்பிகை, ஜெயக்குமார், சிவாஜினி ஆகியோரின் மாமியாரும் மிராஜினி, சௌமியா, ஜனன், தினேஸ், லக்ஸனா, தர்மிகா, சுஜீத்தா, ஜெனுசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிள்றோம்.

தகவல்;
இ. கந்தசாமி
(மகன்)

ஆவரங்கால்,
புத்தூர். (சி/10155)

## சின்னக்குட்டி கந்தசாமி

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சின்னக்குட்டி கந்தசாமி நேற்று (08—12—99) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கதிராசியின் அன்புக் கணவரும், தர்மலிங்கம் (லிங்கம் ஸ்ரோர்ஸ் — அச்சுவேலி), ராஜன் (வி. எஸ். கே. ஸ்ரோர்ஸ்—அச்சுவேலி), சந்திரலிங்கம் (பிரான்ஸ்), சுசிலாதேவி (பிரான்ஸ்), லீலாதேவி (பிரான்ஸ்), ராதாமலர் (பிரான்ஸ்), ஜெயந்திமலர் (பிரான்ஸ்), அருள்மலர் (ஜேர்மனி), உதயராணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவபாக்கியம், தயாநிதி, அருந்தவம், கந்தையா, குகனேஸ்வரன், பாலகிருஷ்ணன், தவராஜசோதி, தில்லைநாதன், சந்திரலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-12-99) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
பொ, சிவலிங்கம்
(மருமகன்)

அச்சுவேலி. (சி/10154)


பட்டதாரிகளான பயிலுநர் ஆசிரியர்

ப ஆ. நியமனம் பெற்று பட்டதாரிகளான ஆசிரியர்களை நிரந்தர பட்டதாரி

ஆசிரியர் சேவையில் சேர்த்தல்

பட்டதாரி ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படாத அனைத்துப்பயிலுநர் ஆசிரியர்களையும் பட்டதாரி ஆசிரியர் சேவையில் உள்வாங்குதல் தொடர்பான முக்கிய பதிவுகளும், கலந்துரையாடலும்

யா/ இந்து மகளிர் கல்லூரியில்

எதி வரும் ஞாயிறு ( 2-12-99) காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பட்டதாரி ஆசிரியர்
வாண்மை விருத்தி அமைப்பு.

(71636)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org